முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்

**OS No.165/2004**

The Oaths Act 1969(Act.44/1969)-ன் விதிமுறைகளின் படி 05.02.2024 நாளாகிய இன்று முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி திருமதி.S.Suganiya Sri, B.A.B.L., (Hons),M.L.,PGDAML. அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| தேதி | 05.02.2024 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | A.C.P.ரத்தினசுப்ரமணியன் | வயது.. | 56 |
| தந்தை பெயர்.. | A.C.பழனியாண்டி | கிராமம்.. | புவனகிரி |

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி...**

31. 1973 டி.டி.கலியபெருமாள் கதவு எண்.167/C1ல் வாடகைக்கு இருந்தார் என்றால் அந்த காலகட்டத்தில் நடந்தது எனக்கு தெரியாது. 1975 ல் அந்த இடத்தில் இருந்து டி.டி.கலியபெருமாள் யை காலி செய்ய அப்போதைய தலைவர் ரங்கநாதபிள்ளை நடவடிக்கை எடுத்தார் என்றால் தெரியாது. 1980-ல் டி.டி.கலியபெருமாள்யிடம் இருந்து அப்போதைய தலைவர் ரங்கநாதபிள்ளை ஒப்புதல் எடுத்துக்கொண்டார் என்றால் தெரியாது. அதனால் டி.டி.கலியபெருமாளுக்கும், அப்போதைய தலைவர் ரங்கநாதபிள்ளைக்கும் விரோதம் ஏற்ப்பட்டது என்றால் இல்லை. அதனால் ரங்கநாதன்பிள்ளையை தலைவர் பொருப்பில் இருந்து நீக்குவதற்காக போட்டி சங்கம் ஒன்றை உருவாக்கினார் என்றால் இல்லை.

32. ரங்கநாதன்பிள்ளைதலைமையில் இருந்த சங்கத்தை அப்புறப்படுத்துவதற்காக டி.டி.கலியபெருமாள் தொடர்ந்து ஒரு சங்கத்தை ஏற்படுத்த முயற்சி செய்து சங்க சொத்துக்களை ரங்கநாதன்பிள்ளையிடம் இருந்து பெறுவதற்காக முயற்சி செய்தார் என்றால் இல்லை. வா.சா.ஆ.47 முதல் 57 வரை ஆவணங்கள் பூவராக சுவாமி கோவிலில் இருந்து நேரடியாக அழைப்பிதழ் கொடுக்கப்படும் என்றாலும் அது தபாலில் கொடுக்கப்படாது என்றாலும் சரியல்ல, தபாலில் தான் கொடுக்கப்படும். உற்சவத்திற்கு அழைப்பிதழ் நேரடியாக கொடுத்து பிரசாதமாக மூன்று கோரைகிழங்கு உருண்டைகள் கொடுக்கப்படும் என்றால் இல்லை. சுவாமி உற்சவத்திற்கு பல்லக்கை தூக்கி

வருபவர்களும் மற்றும் பூவராக சுவாமி கோவில் மேனேஜருக்கும் செலவு தொகையும் சாப்பாடு படியும் மேனேஜரிடம் கொடுக்கப்படும் என்றும் மேனேஜர் தான் அவற்றிக்கான ரசீதை கொடுப்பார் என்றால் இல்லை, கோவிலில் இருந்து தபால் மூலம் கட்டளையை செலுத்த சொல்லி கோவிலின் செயல் அலுவலர் உத்தரவு பிறப்பிப்பார்.

33. வா.சா.ஆ.44 முதல் 57 வரை ஆவணங்களை வழக்கு தாக்கல் செய்த பிறகு வழக்கறிக்காக தயார் செய்த பொய்யான ஆவணங்கள் என்றால் இல்லை, அந்த ஆவணங்கள் இந்து சமய அறநிளைதுறையால் கொடுக்கப்பட்ட ஆவணங்கள். 1985 ல் அப்போதைய தலைவராக இருந்து ரங்கநாதன்பிள்ளை, டி.டி.கலியபெருமாள், ஏ.கே.ராமசாமி, சட்டநாதன், ராஜேந்திரபிரசாத் மற்றும் சிலர் மீது கதவு எண்.167/E ல் இயங்கி வந்த ஸ்ரீ சக்தி பிரஸ் பொருட்களை நாசப்படுத்தியும் அங்கிருந்த புவனகிரி வர்த்தகசங்க ஆவணங்களை தலைவர் ரங்கநாதன்பிள்ளையிடம் இருந்து திருடியதால் அவர்கள் மீது புவனகிரி காவல்நிலையத்தில் 05.03.1985 -ல் காலை 4 மணிக்கு நடந்த சம்பவத்திற்கு அன்றைய தினத்தில் 1 ம் பிரதிவாதியால் புகார் கொடுக்கப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

34. அந்த புகார் ஆனது புவனகிரி காவலி நிலைய குற்ற எண்.68/1985 ஆக பதிவு செய்யப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த நிகழ்விற்கு அசல் வழக்கு எண்.15/1985 என்ற வழக்கில் நீதிமன்ற ஆணையர் நிறமிக்கப்பட்டு அவர் அறிக்கையும் தாக்கல் செய்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கதவு எண்.167/E ல் இடத்தில் ரங்கநாதன்பிள்ளை பிரஸ் நடத்தவில்லை என்று அவரே ஒப்புதல் கொடுத்துவிட்டார் என்ற பொய்யான கட்சியை அசல் வழக்கு.15/1985 ல் ஏ.சி.பி.சட்டநாதன் தலைவர் என்றும் கட்சி செய்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அவ்வாறு சக்தி பிரஸ்-ல் திருடப்பட்ட ஆவணங்கள் தான் வா.சா.ஆ.2 முதல் 5 வரை ஆவணங்களை இந்த வழக்கிற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

35. வா.சா.ஆ.2 முதல் 5 வரை ஆவணங்களை அப்போதைய தலைவர் என்வசம் கொடுத்துவிட்டார் என்று ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அப்போதைய தலைவரிடம் கொடுக்கப்பட்டதா என்று எனக்கு தெரியாது. வழக்கு சொத்து தவிர எங்கள் சங்கத்திற்கு வேறு சொத்துக்கள் உள்ளதா என்றால் வழக்கு சொத்தை தவிர கதவு எண்.167B,C,D உள்ளது . அவல் வழக்கு.15/1985 ல் சட்டநாதன் தான் தலைவர் என்று அந்த வழக்கை நடத்திவந்தார் என்றால் சரிதான். அதன் பிறகு இந்த வழக்கை நான் செயலாளர் என்று தவறாக கூறி 1 ம் பிரதிவாதி மீது இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. இந்த வழக்கிற்கு பொய்யான ஆவணங்கள் தயார் செய்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

36. எங்களது சங்கம் சரியாக பதிவாகாதா சங்கம் என்றாலும் அவற்றின்

உரிமையுள்ள சொத்துக்கள் கதவு எண்.167/B,C,D,E இல்லை என்றாலும் அந்த சொத்துக்களை அபகரிப்பதற்காக இந்த வழக்கு பொய்யாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. நான் கோரிய எந்த பரிகாரமும் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றாலும் சரியல்ல.

**சாட்சி விசாரணை முடிவுற்றது. மறு விசாரணை இல்லை.**

**11 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை....**

**1 ம் பிரதிவாதி செய்த குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

Typed to my dictation in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

sd/-S.Suganiya Sri
Principal District Munsif (FAC)
Chidambaram